பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 11 செவ்வாய்க்கிழமை (24.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 148

# நோர்வே தூதுவரின் வன்னி விஜயத்துக்குத் தடை!
# இராஜதந்திரிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சி!!

## வடக்கில் பெரும் தாக்குதலுக்கு முஸ்தீபு என்று ஊகம்

கொழும்பு,ஏப்ரல் 24

**நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் வன்னி விஜயத்தை அரசாங்கம் தடை செய்துவிட்டது. நேற்றைய அவரது கிளிநொச்சிப் பயணத்தை நிறுத்துமாறு அரசாங்கம் தூதுவருக்கு உத்தரவிட்டதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.**

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை வகிக்கும் நோர்வேயின் கொழும்புத் தூதுவர் அரசாங்கப் பிரதிநிதிகளுடனும் விடுதலைப் புலிகளுடனும் சந்திப்பதும் பேசுவதும் வழமையான செயற்பாடாகும்.

ஆனால், அவர் நேற்றுத் திங்கட்கிழமை வன்னிக்குச் செல்வதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை. பாதுகாப்புக் காரணங்கள் கருதி அவரது பயணத்தை ரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டது.

''அரசாங்கத்திடம் இருந்து நேற்று (ஞாயிறு) மாலை எங்களுக்குத் தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. பாதுகாப்புக் காரணம் கருதி கிளிநொச்சிக்குச் செல்வது புத்திசாலித்தனமானதல்ல. ஆகையால் பயணத்தை ரத்துச் செய்யுங்கள்'' என்று அப்போது தெரிவிக்கப்பட்டது - என்றார் நோர்வேத் தூதரகப் பேச்சாளர் எரிக் நம்பேர்க்.

பாதுகாப்புக்கு அக்கறையான விடயம் எது என்பதை அரச அதிகாரிகள் எமக்குத் தெரிவிக்கவும் இல்லை. தூதுவரின் விஜயத்துக்கான புதிய திகதி எதுவும் எங்களுக்கு தரப்படவுமில்லை - என்றும் பேச்சாளர் நப்பேர்க் சொன்னார்.

'அரசாங்கத்துடன் நாம் எவ்வாறு தொடர்புகளை வைத்திருக்கிறோமோ, அது போலவே விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகளை வைத்திருக்கின்றோம். ஐந்து அல்லது ஆறு கிழமைகளுக்கு ஒரு முறையாயினும் கிளிநொச்சி சென்று நிலைமைகளை ஆராய்வது எங்கள் வழமையான செயற்பாடு' என்றும் பேச்சாளர் நம்பேர்க் மேலும் தெரிவித்தார்.

**ராஜதந்திர வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சி**

நோர்வே நாட்டுத் தூதுவரின் வன்னி விஜயத்துக்குத் தடை விதிக்கப்பட்டதால் வடக்கில் புலிகளுக்கு எதிராக அரசாங்கப் படைகள் தாக்குதல்களை உடனடியாக ஆரம்பிக்கலாம் என்ற சந்தேகம் ராஜதந்திர வட்டாரங்கள் உட்படப் பல தரப்புகளில் எழுந்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தின் மீது கடந்த சில நாள்களாக நடத்தப்பட்ட வான் தாக்குதல்கள் அந்த ஊகத்தை மேலும் வலுப்படுத்துகின்றன என்றும் அக்கறையுள்ள தரப்புகள் கூறுகின்றன.

நோர்வேத் தூதுவரின் வன்னி விஜயத்துக்குத் தடை விதிக்கப்பட்டது - ரத்துச்

(03ஆம் பக்கம் பார்க்க)

**அன்பார்ந்த வாசகர் பெருமக்களே!**

* எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் உங்களது உதயனின் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நேர்ந்தது. அவ்வேளையில் எமக்கு ஒத்துழைப்பு நல்கிய வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் எல்லோருக்கும் நன்றிகள்.

* கடந்த சில மாதங்களாக உங்களுக்கிருந்த தவிப்பை - குறையை - தீர்க்கும் பொருட்டு, நாளை முதல் உதயன் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கையை முந்திய அளவுக்கு அதிகரிக்க உள்ளோம்.

இடைப்பட்ட காலத்தில் சில வேளைகளில் விளம்பரங்களை ஏற்கமுடியாத நிலைமையும் உண்டானது. அது குறித்து வருந்துகிறோம். மீண்டும் உங்களுக்குத் திருப்தி தரும் வகையில் செய்திகள், விளம்பரங்களைப் பிரசுரிக்க வசதி செய்வோம்.

அருகில் உள்ள எமது விற்பனை முகவர்களுடன் தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளுங்கள். உதயன் பிரதி தவறாது கிடைப்பதை நிச்சயப்படுத்துங்கள்.

- நிர்வாகத்தினர்.

## திஸ்ஸ விதாரணவுடன் சு.க.பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு,ஏப். 24

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கும் ஆளும் சுதந்திரக்கட்சி பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

சுதந்திரக்கட்சி முன்வைக்கவுள்ள யோசனை குறித்தே இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் அந்த யோசனைகள் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதிநிதி பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார். (அ-1)

## தொண்டு நிறுவன ஊழியர் படுகொலைகள் குறித்து முறையான விசாரணைகள் நடைபெறவில்லை!

### சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு தெரிவிப்பு

லண்டன், ஏப்.24

இலங்கையில் மூதூரில் கடந்த ஒகஸ்ட் மாதம் பிரெஞ்சு நிறுவனமான பட்டினிக்கெதிரான அமைப்பின் 17 தன்னார்வத் தொண்டர்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் குறித்து முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை என்று சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சுவிஸில் இயங்கும் சர்வதேச சட்டத்தரணிகளைக் கொண்ட இந்த ஆணைக்குழு இச்சம்பவம் குறித்து நடந்த விசாரணை தொடர்பாக தமது அதிருப்தி நிலையை நேற்று வெளியிட்டுள்ளது.

இந்த விசாரணை நடுநிலையாகவும், வெளிப்படையாகவும் முன்னேற்றகரமாகவும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை என்று அந்த ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தப் பகுதியில் பணியில் இருந்த பொலீஸார் ஒருவரின் வாக்குமூலந்தானும் பதியப்படவில்லை என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஏமாற்றமடைந்துள்ளோம் என அந்த ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் நிக்கலஸ் ஹோவன் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கூறியுள்ளார்.

இந்த விசாரணை நடத்தப்பட்ட முறை, இலங்கையின் குற்றவியல் நீதித்துறையின் முறைமைக்கு பெரும் சோதனையான ஒன்றாகும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் அடிக்கடி ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் இருந்திருப்பினும் கூட, இலங்கை அரசாங்கம் சட்டத்தின் ஆட்சிக்கு போதிய மதிப்பளித்து செயற்படவில்லை என்பது பெரும் குழப்பத்தைத் தருவதாகும் - என்றும் நிக்கலஸ் ஹோவன் தெரிவித்தார். (அ-1)

## பயங்கரவாத அமைப்பு அறிவித்தலுக்கு எதிராக புலிகள் வழக்குத் தொடரலாம்

### ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் தீர்மானத்தின் விளைவு

லக்ஸம்பேர்க்,ஏப்.24

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதற்கான காரணங்களை ஐரோப்பிய ஒன்றியம் அவ்வமைப்புக்கு அறிவிக்கவுள்ளது.

லக்ஸம்பேர்க்கில் நேற்று நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனப்படுத்தப்பட்டுத் தடை செய்யப்பட்ட 30 இயக்கங்கள் (மற்றும் 30 தனிப்பட்டவர்கள்) ஏன் அவ்வாறு வகைப்படுத்தப்பட்டன என்ற காரணங்களை அவற்றுக்கு அறிவிப்பதென நேற்றைய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தகுந்த காரணங்களை அடிப்படையாக முன்வைத்தே பயங்கரவாத இயக்கங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. ஆகையால் அவை தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பட்டியலில் இடம்பெறும் என்றும்-

ஒவ்வோர் அமைப்பும் எந்தக் காரணங்களைக் கொண்டு பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டது என்ற விவரத்தை அந்தந்த அமைப்புகளுக்கு அறிவிப்பது என்றும் - ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் 25 பேரும் முடிவு செய்ததாக நேற்றைய கூட்டத்தின் பின்

(03ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் வர்த்தகர் கடத்தல்

கொழும்பு,எப். 24

வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து பிரபல புடைவை வர்த்தகர் ஒருவர் நேற்று வெள்ளைவானில் கடத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

252 - 7285 என்ற இலக்கமுடைய வெள்ளை வானில் வந்த சிலர் இந்த வர்த்தகரைக் கடத்திச் சென்றனர் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (சி)

### இலங்கைக்கு இந்திய ஆயுத உதவி

## தமிழக சட்டசபையில் நேற்று கட்சித் தலைவர்கள் கண்டனம்

சென்னை, ஏப். 24

இலங்கைக்கு போராயுதங்களை இந்திய மத்திய அரசு வழங்கியதாக வெளிவந்துள்ள தகவல் குறித்து தமிழக சட்டமன்றத்தில் நேற்று விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட சகல கட்சிகளின் தலைவர்களும் மத்திய அரசின் செயலுக்கு கடும் கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி கூறியதாவது:

தமிழர்களை வதைக்க, இலங்கையில் உள்ள படையினருக்கு மத்திய அரசு ஆயுதம் வழங்கி உதவிடக் கூடாது. அங்கு அனுப்பப்படும் ஆயுதங்கள் நிச்சயமாக தமிழர்களை வதைப்பதற்காகவே பயன்படும்.

ஆகவே அந்தச் செயலைக் கண்டிப்பாக நிறுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கின்ற உரிமை எமக்கு இருக்கின்றது. பொறுப்பும் எமக்கு இருக்கின்றது - என்றார் அவர்.

பாட்டாளி மக்கள் கட்சி கோ.க.மணி, காங்கிரஸ் கட்சியின் சுதர்சனம் ஆகியோர் உட்பட பலர் மத்திய அரசின் செயலைக் கண்டித்து அதனை நிறுத்தக் கோரியும் உரைகளை ஆற்றினர். (அ-1)

## யாழ்.நகர் மற்றும் வடமராட்சியில் நேற்று பெரும் எடுப்பில் தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.நகரை அண்டிய பகுதிகளும் வடமராட்சியின் சில பகுதிகளும் படையினராலும் பொலீஸாராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

யாழ். நகரப் பகுதியில் நேற்று அதிகாலை தொடக்கம் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

யாழ்.நகரப் பகுதியில் நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி, றக்கா வீதி, அரசடி வீதி, சோம சுந்தரம் வீதி, கோயில் வீதி, செட்டித்தெரு ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தல்வியங்காடு, நாயன்மார்கட்டு, செம்மணி ஆகிய பகுதிகளிலும் இந்தத் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது.

தேடுதல் நடவடிக்கை காரணமாக பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பல பாதிக்கப்பட்டதுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளூடான போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

நேற்று பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்பட்ட வேளையில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்புக் காரணமாக, மாணவர்களும் ஆசிரியர்களும் தாமதமாகப் பாடசாலைகளுக்குச் செல்ல நேர்ந்தது.

சுற்றிவளைப்பின்போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சிலர் பொலீஸிடம்

(03ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 ஆவது ஆண்டு திருமண நிறைவு



**நவரத்தினம் இந்திராணி**

இன்று (24.04.2007)
செவ்வாய்க்கிழமை
50ஆவது ஆண்டு திருமண
நிறைவைக் கொண்டாடும்
எமது அன்பான
பெற்றோரை நோய்நொடி
இன்றிவாழ எல்லாம்வல்ல
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கரந்தன்,
நீர்வேலி. (59828) மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மருத்துவபீட 26ஆம் அணி
**முரளீதரனின்** தந்தை
**இராமலிங்கம் இராசசுந்தரம்**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிக
ளைக் காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட
4ஆம் வருட மாணவர்கள். (25,26 ஆம் அணி)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1974இல் பிறந்த உத்தரட்டாதி நட்சத்திரம், செவ்வாய் அற்ற லண்டனில் வாழும் மணமகளுக்கு லண்டன், ஜேர்மன், ஆஸ்திரேலியா, நோர்வேயில் PR உடைய மணமகன் உடன் தேவை ஜாதகம்,படம், முழு விவரத்துடன் உடன் தொடர்புகொள்க.

விளம்பர இல - 2965, மே/பா உதயன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்மாவட்ட நீதிவான்
திருமதி சரோஜினிதேவி இளங்கோவன்
முன்னிலையில் 20.04.2007 அன்று
சமாதான நீதிவான் ஆக
சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட
தீவக மத்தியஸ்தர் சபை உறுப்பினரும்,
நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள்
அறங்காவலர் சபை முன்னாள்
செயலாளரும், செம்மணத்தம்புலம்
வீரகத்தி விநாயகர் அறங்காவலர் சபை
முன்னாள் தலைவரும், ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்கள
உத்தியோகத்தரும், சிறந்த சமூகத் தொண்டருமாகிய

**நடராஜா விஸ்வநாதன்**

அவர்களை மேலும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
திரு.திருமதி சி.வை.சபாரத்தினம் குடும்பத்தினர்,
திரு.திருமதி கா.ரவீந்திராஜா குடும்பத்தினர்,
திரு.திருமதி இளங்கோ குடும்பத்தினர்,
திரு.திருமதி நாதன் குடும்பத்தினர்,
திரு.திருமதி சிவாகரன் குடும்பத்தினர்,
திரு.திருமதி ஸ்ரீகரன் குடும்பத்தினர்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (59854)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**யோசெவ் பெல்டானோ லெனறென்சியா மரியசெல்வம்**

அன்னை மகிழ — 04.09.1969
ஆண்டவன் அழைக்க — 12.03.2007

அன்னாரின் 45ஆம் நாள் நினைவுதினமாகிய நாளை (25.04.2007) புதன்கிழமை மு.ப. 10மணிக்கு நவாலி சென்.பீற்றர் தேவாலயத்தில் நடைபெறும் இரங்கல்திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்துக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய். (ஓ-50068) - குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

835, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

தொடர்பு: 222 9290

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் PR உடைய 38 வயது, 4ஆம் பாதம், பூரம் நட்சத்திரம், கிரகபாவம் 21, செவ்வாய் குற்றம் அற்றவருக்கு A/L படித்த மணமகள் உடன் தேவை. ஜாதகம், படம், முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல - 2964,
மே/பா உதயன்.

## தவறிவிட்டது

72/18, இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மிக்கல் யேசுதாசன் என்பவருடைய ஓய்வூதிய அட்டை யாழ் நகரமையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் **திருமதி புஸ்பராணி இராஜேஸ்வரன்** அவர்களின் அன்புத்தந்தை

**வே.அருணாசலம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை,
தாதிய உத்தியோகத்தர் நலன் புரிக்
கூட்டுறவுச்சங்கம்.

(59850)

## மரண அறிவித்தல்



**இராமலிங்கம் இராசசுந்தரம்**

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகரும், முன்னாள் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளரும், முன்னாள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவரும்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசசுந்தரம் 22.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் இராமலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.04.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணியளவில் அன்னாரின் தற்போதைய கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34,குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் (59869)

தகவல்: **இ.முரளீதரன்,**
(மகன், 26ஆம் அணி - யாழ் மருத்துவபீடம்).

## 31ஆம் நாள் நினைவலைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



லண்டனில்
இயற்கையெய்திய

அமரர்
**சிவபாலன் சிவராமன்**
**(ராசா)**

வடமராட்சி மண்ணில் — 22.06.1980
லண்டன் மண்ணில் — 25.03.2007

நடுநிசியில் நாவிழந்தோம் நலனிழந்தோம் நாதியற்றோம் சிவராமா
படுதுன்பம் நீ சுமந்து பாவியெமைக் காத்து வந்தாய்
தொடுவான ஒளிக்கீற்றே பேரிருள் ஆச்சே வாழ்வெல்லாம்
வடுவிலாத் தங்கையரே வழியறியா இனத்தவரே உயிர் மூச்சாம்
நெடுவான நண்பர்களே என்ன செய்வார் சிவராமா
கொடும் புயலில் கலமானோம் கரையேற வழியறியோம் வகையறியோம்
நெடுங்கோல் நித்திலமே நீள்தரையில் புலம்பியென்ன கலங்கியென்ன
தொடுபலமே வென்றிடுவாய் தூயோனைச் சார்ந்திடுவாய் தாளாமல்
கெடுமவலம் நீங்கிடவே அடைந்திடுவாய் சாந்தி சாந்தி
மடுமலர்கள் சாத்துகின்றோம் மரணமின்றி வாழ்ந்திடுவாய் தெய்வதமே.

எமது உறவின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் எங்கள் துன்ப துயரங்களில் பங்குகொண்ட அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (24.04.2007) நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பிகை நிலையம், சந்தை வீதி,
கரணவாய் வடக்கு, நவிண்டில். (59871) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சட்டநாதர் சிதம்பரம் (காஞ்சனா)**

மண்ணில் — 28-10-1935
விண்ணில் — 25-03-2007

தாய் அன்பால் எங்கள் உள்ளம்
தவிக்கின்ற வேளையில்...எம்
எண்ணம் போல் இன்றி எதுவும் இறை நியதி என்றே
அன்னையின் நல்ஆத்மா சாந்திபெற
மணற்காட்டு கந்தனை வேண்டுகின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
மறவன்புலோ,
சாவகச்சேரி. (59837)

தற்காலிக முகவரி: ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **குமாரு வேலுப்பிள்ளை** (விதானையார்)

மலர்வு — 20★09★1945
உதிர்வு — 25★03★2007

25.03.2007 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமான எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கடிதம், தொலைத்தொடர்புகள் மூலம் துயர்பகிர்ந்தோர்க்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (25.04.2007) புதன்கிழமை காலை 6மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குருத்தடித் தோட்டம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி. (59841)

வே.சரஸ்வதி, வே.யாழினி
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), குடும்பத்தினர்.

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



அமரர்
**பொன்னுத்துரை சுந்தரலிங்கம்**

தோற்றம் — 29.01.1944
மறைவு — 25.03.2007

ஆசார சீலராய் நிறைவாழ்வு வாழ்ந்து 25.03.2007 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னுத்துரை சுந்தரலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டுடைச் சந்தி, மானிப்பாய். (59753) குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவுகளில்...



திருமதி
**புவனேஸ்வரி அரியதுரை**

திதி: அட்டமி

மலர்வு — 07-12-1926
உதிர்வு — 14-05-1997

நீங்கா நினைவுகளுடன் ஆண்டு பத்தாகி
தாங்கா விழிகளுடன் எமை வளர்த்து
பாங்காய் நாம் பாரினில் சிறந்திட
வைத்த தாயை நாம் மறவோமே.

என்றும் உங்கள் நினைவில்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

ஆசீர்வாதப்பர் வீதி,
(59852)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# வாழ்வாதாரங்களைத் தொலைத்து அல்லலுறும் மட்டக்களப்பு மக்கள்

தமிழர் தாயகத்தின் தேசிய வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கும் அத்தியாவசிய அடித்தளங்களைப் படிப்படியாகத் தகர்த்துவிடும் சதித் திட்டத்தை தென்னிலங்கை அரச அடக்குமுறையின் குரூர வன்முறை வடிவம் நோக்காகக் கொண்டது என்பதை இப்பத்தியில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பல தடவைகள் அம்பலப்படுத்தியுள்ளோம்.

ஒரு தேசிய இனக்கட்டமைப்பாகத் தமிழர்கள் தலை நிமிர்ந்து உறுதியோடு நிற்பதற்கு என்னென்ன மூலங்கள் அவசியமோ - அத்தியாவசியமோ - அவற்றையெல்லாம் பல்வேறு மட்டங்களில் - பல்வேறு பரிமாணங்களில் - தாக்கி அழித்து, தமிழரின் தனித்துவ இனம் என்ற ஸ்திரத்தன்மையைத் தகர்ப்பதே பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்கின் நீண்டகால நோக்காகும்.

மொழி உரிமை முதல், வாழிட உரிமை, வாழ்வியல் உரிமை வரை சகல இனக்கட்டுமான ஆதாரங்களையும் தகர்த்து அழிக்கும் இந்தக் கொடுமை தமிழர் தாயகத்தின் தென்முனையில் - கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் - திட்டமிட்ட வகையில் அரங்கேறுவதை மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் புள்ளி விவரங்களுடன் புட்டு வைத்திருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகை 5 லட்சத்து 80 ஆயிரம். அதில் தமிழர்கள் 4 லட்சத்து 27 ஆயிரம் பேர்.

இந்த 4 ல்ட்சத்து 27 ஆயிரம் தமிழர்களில் தற்போதைய யுத்தக் கொ்டூரங்கள் மற்றும் நெருக்கடிகள் காரணமாக ஒரு லட்சத்து 66 ஆயிரம் பேர் - அதாவது மூன்றில் ஒன்றுக்கும் அதிகமான எண்ணிக்கைத் தமிழர்கள் - அங்கு தமது வாழ்விடங்களை விட்டு வேறு பிரதேசங்களுக்கு அகதிகளாக - ஏதிலிகளாக - இடம்பெயர வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தின் பொருளாதார வளத்தைச் செழுமைப்படுத்திவந்த பூர்வீக மக்கள் அகதிகளாக்கப்பட்டமையால் மட்டக்களப்பு மாவட்டத்தின் வளம் சீரழிக்கப்பட்டிருக்கின்றது.

இராணுவ நடவடிக்கைகளினால் படுவான்கரைப் பிரதேசத்தில் மட்டும் பத்தாயிரம் விவசாயிகளின் செயற்பாடுகள் சீர்குலைந்துள்ளன. சுமார் 63 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நெற்சாகுபடி அதன்பின் அறுவடை, சூடு அடித்தல் மூடையாக்கல் மற்றும் விற்பனையின்றி வீணாகியுள்ளது. சுமார் 95 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் இவ்வாறு பாதிப்புற்றிருக்கின்றது.

படுவான்கரைப் பகுதியில் நாளொன்றுக்கு உற்பத்தியான சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமான லீற்றர் எருமை மற்றும் பசுப்பால் உற்பத்தி இப்போது செயலிழந்து விட்டது. படையினரின் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுகளால் 8 ஆயிரம் கால்நடைகள் வரை இறந்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகளுக்கு இடையே சுமார் ஐம்பதாயிரம் கால்நடைகளை அவற்றின் உரிமையாளர்கள் இழந்துள்ளனர். ஒன்றில் அவை காணாமற் போய்விட்டன, அல்லது களவாடப்பட்டு விட்டன. மேலும் இராணுவச் செயற்பாடுகளினால் நாள் ஒன்றுக்கு இருபது கால்நடைகள் வரை உயிரிழக்கின்றன என மதிப்பிடப்படுகின்றது.

மேலும், இதே படுவான்கரைப் பகுதியில் மேட்டு நிலங்களில் - சுமார் ஐயாயிரம் ஏக்கரில் - பெரும்போகச் செய்கையாக மேற்கொள்ளப்பட்ட சோளம், குரக்கன், உழுந்து, பாசிப்பயறு, இறுங்கு, எள் போன்ற உப உணவுப் பொருள்கள் மற்றும் கத்தரி, மிளகாய், புடோல், தக்காளி போன்ற மரக்கறி வகைகள் ஆகிய பயிர்ச்செய்கைகள் முற்றாகச் சீர்குலைந்துள்ளன.

படுவான்கரைப் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட வாவிகளிலும் குளங்களிலும் மீன்பிடித் தொழிலைச் செய்துவந்த சுமார் ஐயாயிரம் மீன்பிடித் தொழிலாளர்கள் படை ஆக்கிரமிப்பால் வருவாயையும் தொழிலையும் அடியோடு இழந்துள்ளனர்.

மேலும் செங்கல் உற்பத்தி, கருங்கல் உற்பத்தி, மட்பாண்ட உற்பத்தி மற்றும் சிறுகைத்தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் அறுபது வீதமான நிலப்பரப்பில்வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளமையால் அந்த மாவட்டத்தின் தேசிய வருமானம் வீழ்ச்சியுற்றுள்ளது என்று வேதனையோடு சுட்டிக்காட்டுகின்றார் அரியநேத்திரன் எம். பி.

அதுமட்டுமல்ல, இப்பிரதேச மக்களின் கலாசார பாரம்பரியசின்னங்களும், ஆலயங்களின் உடைமைகளும், வீட்டுத் தளபாடங்கள், யன்னல்கள், கதவுகள் போன்றவையும் சூறையாடப்பட்டுவருவதை விசனத்துடன் அம்பலப்படுத்திக் குமுறுகின்றார் அவர்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழரின் அன்றாட ஜீவனோபாய வழிவகைகளை மூடி, அவர்களின் வாழ்வாதாரங்களைச் சிதைத்து, அடிப்படைக் கட்டுமானங்களைத் தகர்த்து, தொழில் வாய்ப்புக்களை நாசமாக்கி, சமூகக் கட்டமைப்பை அழித்து, அந்தப் பூர்வீகப் பிரதேசங்களிலிருந்து ஏதுமற்ற ஏதிலிகளாக வேரோடும் வேரடி மண்ணோடும் அவர்களை அப்புறப்படுத்தும் இந்தக் குரூரத் திட்டத்துக்கு சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து, செயற்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தமிழினம் இன்று தள்ளப்பட்டிருக்கின்றது.

இந்த மக்களுக்கு விடிவுகாலம் எப்போது? தமது தாயக மண்ணில், சொந்த முனைப்பில் அவர்கள் தலை நிமிர்ந்து வாழ்வது எவ்வாறு? அவர்களின் கௌரவத்துடன் கூடிய வாழ்வு மீளுவது எங்ஙனம்? - இவையே தமிழர் மனதை இன்று குடையும் வினாக்களாகும்.

# உணவுப் பண்டங்களுக்கு புதிய விலைகள்; நாளை நடைமுறைக்கு வருகின்றன

யாழ்ப்பாணம்,ஏப். 24

குடாநாட்டின் உணவகங்களில் தேநீர் உட்பட உணவுப் பண்டங்களின் விலைகள் யாழ். வணிகர் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நாளை புதன்கிழமை தொடக்கம் நிர்ணயித்த விலைகளிலேயே உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படவேண்டும் என வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ். உணவகங்களின் உரிமையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.

யாழ். அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நாளை புதன்கிழமை தொடக்கம் உணவுப் பண்டங்களின் விலைப் பட்டியலைப் பார்வைக்கு வைக்குமாறு வணிகர் கழகம் கேட்டுள்ளது.

உணவுப் பண்டங்களின் விலை விவரம் வருமாறு:

பிளேன் தேநீர் - 6 ரூபா, பால் தேநீர் - 14 ரூபா, உழுந்து வடை - 10 ரூபா, உழுந்துவடை (பெரியது) - 12 ரூபா, கடலைவடை - 12 ரூபா, வாய்ப்பன் - 10 ரூபா, றோல் (உருலைக் கிழங்கு போட்டது) - 15 ரூபா, றொட்டி (தனிறொட்டி) - 7 ரூபா, றொட்டி (சம்பல், சாம்பாருடன்) - 8 ரூபா, இடியப்பம் - 3 ரூபா, இட்லி (பெரியது) - 8 ரூபா, இட்லி (சிறியது) - 6 ரூபா, மரக்கறிச் சாப்பாடு (அரைச்சாப்பாடு) - 40 ரூபா, மரக்கறிச் சாப்பாடு (முழுச்சாப்பாடு) 60 ரூபா.

மேற்படி புதிய விலைகள் உணவக உரிமையாளர்களின் பூரண சம்மதத்துடனேயே நிர்ணயிக்கப்பட்டதாக வணிக கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-202)

*கல்விசாரா ஊழியர் பணிப்புறக்கணிப்பு; எனினும்...*

# யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாடுகள் பாதிப்புறாதிருக்கத் தொண்டர் சேவைகள்

யாழ்ப்பாணம்,ஏப். 24

மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து அனைத்திலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் இன்று முதல் கல்விசாரா ஊழியர்களின் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு இடம்பெறவுள்ளது.

சம்பள முரண்பாடு, ஊக்குவிப்பு நிலுவைக் கொடுப்பனவு மற்றும் 2006ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சம்பள உயர்வை 2004ஆம் ஆண்டில் இருந்து வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் ஈடுபட உள்ளனர்.

எனினும், பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மாற்று ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாதுகாப்பு மற்றும் நீர்வழங்கல் ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கான வாகன சேவை சாரதி மற்றும் மாணவர் விடுதியின் சில பணியாளர்களுக்கும் இவ்வேலை நிறுத்தத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களின் விரிவுரைகள் மற்றும் திட்டமிடப்பட்டிருந்த பரீட்சைகள் தடைப்படாமலிருக்க தொண்டர் அடிப்படையிலான ஊழியர் சேவையை வழங்க யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்வந்துள்ளது. இவ்வாறான தொண்டர் சேவையை வழங்குவதற்கு துணைவேந்தரின் அனுமதியைக் கோரி ஊழியர் சங்கம் ஏற்கனவே கடிதமொன்றை அவருக்கு அனுப்பி வைத்துள்ளது. கடந்த ஒரு வருடமாக தடைப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேலும் தடைப்படாதிருக்கும் பொருட்டே இம்முறை இவ் விசேட நடைமுறைக்கு ஊழியர் சங்க பொதுச்சபை ஒப்புதலளித்துள்ளது - என்று உள்ளது. (அ-1-68)

# ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல்: சர்வதேச அமைப்புக்கு ரணில் கடிதம்

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் கொலை அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'சர்வதேச பத்திரிகை நிறுவனத்திற்கு' முறைப்பாடு செய்யவுள்ளார்.

இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கொழும்பு கேம்பிரிஜ் பிளேஸில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக ஊடகவியலாளருக்கு விளக்கமளிப்பார்.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் கடத்தப்படுகின்றமை, அச்சுறுத்தப்படுகின்றமை, கொலை செய்யப்படுகின்றமை போன்ற ஊடக உரிமையை மீறும் செயற்பாடுகள் தொடர்பாக இந்தக் கடிதத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது என்று கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

## 105 நிலக் கண்ணிகள் வவுனியாவில் மீட்பு

கொழும்பு, ஏப். 24

வவுனியா மாவட்டத்தில் அரசுப்படைகள் நடத்திய ஒரு தேடுதல் நடவடிக்கையில் பெருமளவிலான கண்ணிவெடிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வவுனியாவில் தம்பனை என்ற கிராமத்தில் பல மறைவிடங்களில் இருந்து மொத்தம் 105 ஆட்களுக்கு எதிரான கண்ணிகள் (**anti - personal mines**) கைப்பற்றப்பட்டன என்று இராணுவப் பேச்சாளர் லெப். கேணல் உபாலி ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கண்ணிகள் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.(சி)

## வவுனியாவில் ஆணின் சடலம்

வவுனியா, ஏப். 24

வவுனியா கோவில்குளம் பகுதியில் முப்பது வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் இரவு காணப் பட்டது. அந்தச் சடலத்தை பொலிஸார் நேற்றுக்காலை அங்கிருந்து மீட்டுள்ளனர்.

பச்சை நிற உள்ளாடைகளுடன் மட்டும் காணப்பட்ட அந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது. குறித்த நபர் கழுத்து நெரிக்கப்பட்டே கொல்லப்பட்டிருக்கின்றார் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (சி)

## நாளை

சித்திரை - 12
புதன்கிழமை
25.04.2007
திதி: நவமி
முழுவதும்
நட்சத்திரம்: ஆயிலியம்
முழுவதும்
சுபநேரம் : 04.30 - 6.00
ராகுகாலம் : 12.00 - 01.30

## நாளைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் ஹோமோ சேப்பியன் - மனித விலங்கு(Homo Sapiens - Human Animal - Phylogeny) என்னும் உயிரின வரலாறு தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. பேராசிரியர் வி.கே. கணசலிங்கம் கருத்துரை வழங்குவார்.

## யாழ்.நகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

**வடமராட்சியில்...**

வடமராட்சியில் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, கெருடாவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசம் நேற்றுக்காலை 6 மணிக்கு சுற்றி வளைக்கப்பட்டது.

படையினரும் பொலீஸாரும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இத் தேடுதல் முற்பகல் 11.30 மணிவரை நீடித்தது.

மேற்குறிப்பிட்ட பகுதிகள் ஊடான பஸ் சேவைகள் மாற்றுப் பாதைகள் ஊடாக இடம்பெற்றன. இத்தேடுதலின் போது எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**தென்மராட்சியில்...**

சாவகச்சேரி, மீசாலைப் பதியிலும் நேற்றுக்காலை முதல் படையினரும் பொலீஸாரும் இணைந்து தேடுதலில் ஈடுபட்டனர். வாகனங்கள் சோதனை செய்யப்பட்டதுடன் வீதியில் சென்றவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (அ-1-8-68-155-111-51-79)

## 'மிக்' விமானங்கள் குண்டுவீச்சு

கொழும்பு, ஏப். 24

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளிலுள்ள புலிகளின் நிலைகள் மீது 'மிக்' விமானங்கள் நேற்றுப்பகல் குண்டு வீச்சு நடத்தின எனத் தேசியப்பாதுகாப்பு நிலையம் அறிவித்துள்ளது.

நாகர்கோவில் தாளையடியிலுள்ள கடற்புலிகளின் தளம் மீது நேற்றுப்பகல் 12 மணியளவில் விமானப்படையினரின் மிக் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின.

இதேவேளை நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பு தொப்பிகல தெற்கில் புலிகளின் நடமாட்டத்தை இலக்கு வைத்து மிக் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின இவ்வாறு தேசிய பாதுகாப்பு நிலையம் மேலும் தெரிவித்தது. (சி)

## நோர்வே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டது - தங்களுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும், இது குறித்துத் தாங்கள் தத்தமது நாட்டு அரசுகளை உஷார்ப்படுத்திட உள்ளதாகவும் மேற்குலக ராஜதந்திரிகள் பலரும் - ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்கு கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கை அதிகாரிகளுடனான உறவுகளை பாதிப்புறச் செய்வதற்கு விரும்பவில்லை என்றும் அதனால் தாங்கள் இனங்காட்ட விரும்பவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அரசு அதிகாரிகள் வெறுமனே அச்சுறுத்தல்களை விடவில்லை. இப்போது உடனடியாக இல்லாவிடினும் விரைவில் வடக்கின் மீது அரசு படைகள் பாரிய தாக்குதலை மேற்கொள்ளோம் என்று ராஜதந்திரிகள் மத்தியில் கருத்து ஒற்றுமை நிலவுவதை அறியமுடிகிறது.

'வடக்கில் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டால் அதனை எதிர்த்து முறியடிக்கத் எமது முழுப் பலத்தையும் காட்டுவோம்'' என்று கடந்த 20 வருட காலத்தில் 200 இற்கும் மேற்பட்ட தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

நோர்வேத் தூதுவரின் கிளிநொச்சி விஜயம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக ஞாயிறு இரவு தமக்கு தூதரக அதி காரிகளால் தெரியப்படுத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. (அ)

## அல்வாய் இளைஞன் வெள்ளியன்று கடத்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

அல்வாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 20ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்வாயைச் சேர்ந்த சிவபாலேந்திரன் (வயது -26) என்பவரே கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருமன்காட்டுச் சந்திக்குச் சமீபமாக வைத்து இவர் கடத்தப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-8)

## கடும் வெப்பநிலை தொடரும்

யாழ்ப்பாணம்,ஏப்.24

குடாநாட்டில் தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவி வருவதாகத் திருநெல்வேலி காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மே மாதம் முதலாவது வாரம் வரை இந்த வெப்பமான காலநிலை தொடரும் எனவும் அது அறிவித்துள்ளது.

பகல் வேளைகளில் மட்டுமல்லாது இரவு நேரங்களிலும் கடும் வெப்பம் நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியன் தற்போது இலங்கைக்கு நேரே உச்சங்கொண்டிருப்பதனால் இந்த வெப்பமான காலநிலை நிலவுவதாக வானிலை அவதானிப்பு நிலையம் தெவித்தது.

இது வருடந்தோறும் உண்டாகும் காலநிலை என்றும் - கடந்த சில நாள்களாக வெப்பநிலை 34° செல்சியஸாக உள்ளதாகவும், கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இது 35° செல்சியஸாக உயர்ந்து காணப்பட்டதாகவும் வானிலை அவதான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(அ-8)

## உலகக் கிண்ண கிரிக்கெட்; முக்கிய ஆட்டம் இன்று

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட்தொடரில் இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான அரையிறுதி ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

உலகக் கிண்ண போட்டியில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஆட்டமாக இந்தப் போட்டி கருதப்படுகின்றது.

இந்தப் போட்டியில் நியூஸிலாந்து அணி தனது வழமையான வீரர்களுடன் களம் இறங்குகிறது.

இலங்கையணியில் வேகப்பந்து வீச்சாளரான லசிந்த மலிங்க காயங் காரணமாக இடம்பெறவில்லையென்று கூறப்படுகின்றது. அவருக்கு பதிலாக முன்னாள் அணித்தலைவர் மார்வன் அத்தப்பத்து இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டும் அணி இறுதி ஆட்டத்தில் பங்குகொள்வதற்குத் தகுதி பெறும். (அ-8)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிய மக்கள் முஜாஹிதீன் அமைப்பின் நிதியை முடக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முந்திய முடிவை நீதிமன்றம் கடந்த வருடம் ரத்துச் செய்து தீர்ப்பு வழங்கி இருந்தது. முஜாஹிதீனின் நிதியை முடக்கு வதற்கான பொருத்தமான காரணங்கள் தெரிவிக்கப் படவில்லை என்று கூறியே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

அந்தக் குறைபாட்டை நீக்கும், இனிமேல் அவ்வாறு தடுக்கும் ஓர் ஏற்பாடாகவே ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் இந்த நேற்றைய முடிவை மேற்கொண்டிருக்கின்றனர் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகள், பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கம், குர்டிஷ் தொழிலாளர் இயக்கம் ஆகியன உட்பட 30 அமைப்புகளை தனது பயங்கரவாதப் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்திருந்தது.

அதற்கான காரணங்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிக்கப்பட்டதும் அவை ஒன்றியத்தின் முடிவுக்கு எதிராக வழக்குத் தொடரமுடியும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறவாத நினைவில் ஈராண்டுகள்



நயினை **வீரகத்தி குலஆனந்தன்**
(வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் முன்னாள் நிலப் பரிசோதனைக்குழு அதிகாரி)

மண்ணில் : 17.10.1954
முருகனடியில் : 16.04.2005
திதி: அட்டமி 24.04.2007

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*30/4, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள், பேத்தி.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியை திருமதி வினிபிறீடா பாலதாசன் அவர்களின் அன்புக் கணவர்

**அந்திரேஸ்பிள்ளை பாலதாசன்**

*அவர்களின் மறைவுகுறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

நலன்புரிக்கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

## ஆண்டு நான்கு ஆனதே பப்பா

மண்ணுலகில்
20 ★ 05 ★ 1927



விண்ணுலகில்
24 ★ 04 ★ 2003

அமரர் **தொம்மை பிலிப்பு**

*அன்பின் திருவுருவாய்*
*ஆதரவில் தந்தையாய்*
*இகமதில் எம் வாழ்வு சிறக்க*
*இரவு பகல் உழைத்து நின்று*
*இனிய கனவுகளை மனதில் சுமந்து*
*இறைவனடி சேர்ந்திரோ எம் அன்பு நிறை பப்பாவே!*
*எம்மை இவ்வுலகில் ஏன் தவிக்க விட்டீர்?*
*எம் குரல் உமக்கு கேட்கிறதா?*

கச்சாய் வீதி,
கொடிகாமம். (59870)

நீங்கா நினைவில்...
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை கார்த்திகேசு

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கார்த்திகேசு நேற்று (23.04.2007) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, செல்லம்மா, செல்லக்கண்டு மற்றும் சதாசிவம் (கனடா) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சின்னம்மாவின் கணவரும் சறோஜினிதேவி, ஸ்ரீஸ்கந்தராசா (கனடா) மற்றும் காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் தங்கராசா (மன்னார்), கலாநிதி (கனடா) ஆகியோரின் மாமனும் விஜிதா - தேவராஜா, சுரேந்தர், கார்த்தீபன், ராதிகா, விமலதாஸ், கஜலக்சன், குகலக்சன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***2ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு.*** (59893)

தகவல்: குடும்பத்தினர்.

### வன்னித்தம்பி கங்காதரன்



**(புகையிரதச் சாரதி - மட்டக்களப்பு, நாவலப்பிட்டி)**

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட வன்னித்தம்பி கங்காதரன் நேற்று (23.04.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வன்னித்தம்பி தம்பதியரின் மகனும் கரவெட்டி பொன்னம்பலம் தம்பதயிரின் மருமகனும் ஜெயந்தியின் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேசசபை, கொட்டகல) அன்புக்கணவரும் ரகுராமின் அருமைத் தந்தையும் சிவபூசமலர், புனிதவதி, திருமலர் (கனடா), சாரதாதேவி, மகாலட்சுமி ஆகியோரின் சகோதரனும் திருநாவுக்கரசு, நாகேந்திரன், ஜெகதீஸ்வரன் (கனடா), நவரத்தினம், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், புகையிரதத் திணைக்கள அலுவலர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***537, சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.***

தகவல்: **நா.வன்னித்தம்பி (தந்தை).**

### செல்வி வடிவேலு வனிதா



**(யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட பொதுக்கலை மாணவி)**

கோப்பாய் மத்தி, மாரியம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வடிவேலு வனிதா 22.04.2007 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் வடிவேலு - ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகளும் ரஞ்சித்குமார், ரஜிதா, அனித்தா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரமேஸ் (கைதடி) அவர்களின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***கோப்பாய் மத்தி, கோப்பாய்.*** (59882)

தகவல்: குடும்பத்தினர்.


## A/L -2009

**பொருளியல்**
அறிமுக வகுப்பு ஆரம்பம்
25.04.2006 4.00 (புதன்)
திங்கள், புதன்
4 - 5.30

**திகழ் கல்வி நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.


### பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகின

அரசாங்கப் பாடசாலைகள்யாவும்இரண்டாம்தவணைக்காக நேற்று மீண்டும் ஆரம்பமாகின. எனினும் யாழ்.மாவட்டத்திலுள்ள சில தனியார் பாடசாலைகள்நாளையே ஆரம்பமாக வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

*(1-51-79)*


**உள்நாடு, வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்**

**திருமுருகன் கொம் நெற்**
259,கே. கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. : 7835
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. தொ.பே: 7310

**ஐடியல்** ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

A/L 2009, 2008, 2007
**கலை, வர்த்தகம் புதிய பிரிவுகள்**

| | |
|---|---|
| பொருளியல் | E.ஞானேஸ் |
| கணக்கீடு | R.வின்சன் |
| வ.கல்வி | K.சாந்திநாதன் |
| தமிழ் | பிரபல ஆசிரியர் |
| இ.நாகரிகம் | N.T.தரன் |
| புவியியல் | S.கிருஸ்ணா |
| அளவையியல் | P.கமல் |
| நாட.அரங்கியல் | K.மங்களேஸ் |
| அரசறிவியல் | T.திருமுருகன் |
| வரலாறு | S.ஜெயக்குமார் |

★ இம்மாதக் கட்டணம் FREE
ஆரம்பம் : 25.04.2007 4 p.m.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம்மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.

**பெனின்சுலா அக்கடமி**
புங்கன்குளம் வீதி - அரியாலை, யாழ்.
(அரியாலை சனசமூக நிலைய மண்டபம்)

*ஆரம்பம் :-*
**A/L 2009 கலை, வர்த்தகப் பிரிவுகள்**
தமிழ் - சிவா (BA) 24.04.2007 பி.ப 4.30
புவியியல் - S.R.சர்மா (BA) 24.04.2007 பி.ப 3.30.
பிரபல ஆசிரியர்களுடன் ஏனைய நாட. அரங்கியல், இந்து நாகரிகம், அளவையியல், அரசியல், கிறீஸ்தவம், பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி ஆகியன நடைபெறுகின்றன.
✱ *விசேட புலமைப் பரிசில் தரம் 5 முதல் O/L வரை, சிங்கள வகுப்புகள் என்பன நடைபெற்று வருகின்றன.*
✱ *மிக் விரைவில் A/L 2009 கணித, உயிரியல் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.*

**விற்பனைக்கு உண்டு**
**HP 1020 Laser Printer 22,500/=**
மேலதிக பொருள்கள்
**Computers and Accessories, Monitor, Printers, Scanner, Toners, Ribbons, UPS, Vcd Player, Woofer, CD's and etc.**
**SDS Computer Services,**
125 A, Stanly Road, Jaffna.
T.P.No: 4590686.


## கண்ணீர் அஞ்சலி



*ஓய்வு பெற்ற முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகரும் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்க முன்னாள் பொதுமுகாமையாளருமான*

**இராமலிங்கம் இராஜசுந்தரம்**

அவர்கள் 22.04.2007 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு ஆன்மா இறைவனில் அமைதியுற எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க பணிப்பாளர்களும், பொதுச்சபை உறுப்பினர்களும், பணியாளர்களும்.**

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஜயா ஆறுமுகம்



**(ஓய்வுபெற்ற ரெலிகொம் தொழில்நுட்ப உத்தியோகத்தரும், பிரபல மின் மெக்கானிக்கும்)**

புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர், ராஜ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலு என அன்பாக அழைக்கப்படும் தம்பிஜயா ஆறுமுகம் நேற்று (23.04.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ் சென்றவர்களான குமாரசாமி - பவளம் தம்பதியரின் அருமை மருமகனும் அன்னலெட்சுமியின் (பதுமா) அன்புக் கணவரும் விக்னேஸ்வரன் (ஹொலன்ட்), திருமதி மலர்விழி (நோர்வே), திருமதி லதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராசா (ஓய்வு பெற்ற அதிபர்), திருமதி தவமணி கமலராசா (அதிபர், யாழ். கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), பரமானந்தன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்), திருமதி கமலாதேவி ஸ்ரீ ரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கு.சண்முகநாதன் (பொன்மணி - S.C.F. திருகோணமலை), கு. கதிர்காமநாதன் ஜே.பி. (யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருணா, கேதீஸ்வரன், வெற்றிச் செழியன் ஆகியோரின் அன்பு மாமனும் திவ்வியா (ஹொலன்ட்), மீரா, துளசி (நோர்வே), சந்தோஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பிற்பகல் 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 6, ராஜவீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.*
(59877)

தகவல்: **கு. கதிர்காமநாதன் (ஜே.பி. - மைத்துனர்)**

### வல்லிபுரம் சிவபாக்கியநாதன்



**(ஓய்வுபெற்ற மருந்தாளர்)**

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவபாக்கியநாதன் நேற்று (23.04.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - வைரவிப் பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் திரு. திருமதி காசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் கிருபவதனி (A.M.O.), கேதீஸ்வரன் (உதவி நூலகர், யாழ். பல்லைக் கழகம்), ஸ்ரீ சாயி (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதீபன் (ஆசிரியர்), டயனி ஆகியோரின் அன்பு மாமனும் தணிகன், நயனிகா, கரிஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற ராஜேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற சிவசுந்தரம் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைத்தியசாலை அருகில், கோப்பாய்.* (59879)

தகவல்: **குடும்பத்தினர்.**

### டன்சன் பிரான்சிஸ் பொனிபஸ்



**(முன்னாள் உத்தியோகத்தர், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் )**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வரியப்புலம் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட டன்சன் பிரான்சிஸ் பொனிபஸ் 21.04.2007 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேஜினாவின் அன்புக் கணவரும் மக்ஸ்வெல் (பொனிபஸ் - மாலைதீவு), காலஞ்சென்ற டிமதி, ஐரா (கொழும்பு), அற்றின் (லண்டன்), ஐறின் (லண்டன்), டயனா (சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதா, சரத்குமார் (கொழும்பு), கிருஸ்ணதாஸ் (லண்டன்), கிரிதரன் ஆகியோரின் மாமனும் மொறின், மைக்கல், மாலின், றொசான், மீரா, ரசிகா, தளிர், அபிஷன், சன்றோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரியப்புலம், சுன்னாகம். தொ.பே. 0602213321*

தகவல்: **கிரிதரன் (மருமகன்).** (59883)

### வைத்திலிங்கம் காங்கேசு (ஓய்வுபெற்ற ஊழியர், C.T.B)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் காங்கேசு நேற்று (23.04.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சுதாகர், சுகிர்தா, சுவாஸ்கர் (புவனேஸ் பான்சி கவுஸ்), சுபாஸ்கர் (பொறியிலாளர் - லண்டன்), சுயாத்தா (Save the Children - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுமார் (சனோஜா சுவையகம்), சுஜாத்தா, கிருஷ்ணவேணி, கஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் சனோஜா, கோபிகன், திசானா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் தங்கவேல், லிங்கம், சிவானந்தம், ஈஸ்வரி, பாரதி ராணி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மலப்பை, சுன்னாகம்.* (59875)

தகவல்: **பிள்ளைகள்.**

### சங்கரப்பிள்ளை கதிரித்தம்பி

**(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் - காசநோய் வைத்தியசாலை, மயிலிட்டி)**



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கதிரித்தம்பி நேற்று (23.04.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் நவரட்ணலிங்கம் (ஜேர்மனி), இன்பமலர், வசந்த மலர், ஆனந்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சித்திரா (ஜேர்மனி), இலட்சுமிகாந்தன், கணேச லிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும் சர்மிளா, பிரமிளா, கபில ஜீவன், மிதுலா, அனுஷியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, மேதர் லேன், மானிப்பாய்.* (59889)

தகவல்: **நவரட்ணலிங்கம், ஆனந்தலிங்கம் (மகன்மார்), க. இலட்சுமிகாந்தன் (மருமகன்)**

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org